Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC .No. 22/2024**

**Deposition of PW. 1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹரிஹரன் | ஜாதி | : | |
| த/பெ | : | அழகர்சாமி | தொழில் | : | பெயிண்ட்டர் |
| கிராமம் | : | பிள்ளையார்நத்தம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 28/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026.

( எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை**

நான் பிள்ளையார்நத்தத்தில் குடியிருந்துகொண்டு பெயிண்ட்டராக வேலை பார்த்து வருகிறேன். எதிரி நாச்சிமுத்தை தெரியும். கடந்த 11.09.2023 ஆம் தேதி இரவு 10.45 மணியளவில் எனது தங்கை பிரசவம் பார்த்துவிட்டு எங்கள் வீட்டில் இருந்தார். அப்போது எனது பக்கத்து வீட்டிலிருந்த எதிரி நாச்சிமுத்து மது அருந்திவிட்டு வந்து சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். நான் அவரிடம் சென்று பக்கத்தில் நாங்கள் இருக்கிறோம் சத்தம் போடாதீர்கள் என்று சொன்னேன். நீ என்னடா என்னை கேட்பது என்று சொல்லி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி கீழே தள்ளிவிட்டார். அப்போது எனது தாயார் என்னை பிடித்துக்கொண்டார். உடனே எதிரி நாச்சிமுத்து அவரது வீட்டில் இருந்த கத்தியை எடுத்துக்கொண்டு வந்து என் கண்ணில் வீசினார். அதில் எனது கண்ணாடி உடைந்து புருவத்தில் காயம் ஏற்பட்டது. அருகிலிருந்த எனது சித்தப்பா எல்லோரும் ஓடி வந்தார்கள். காயம்பட்ட என்னை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். அங்கு முதலுதவி சிகிச்சை செய்துவிட்டு அன்றையதினம் சின்னாளபட்டி காவல்நிலையம் வந்து நடந்த சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் படி புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனுவை எனது சித்தப்பா எழுதிக்கொடுத்தார். நான் கையெழுத்து செய்தேன். அந்த புகால் மனுவில் போடப்பட்டுள்ள கையெழுத்துஎன்னுடையது தான். அந்த புகார் மனு **(அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தாரர்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

உங்களிடம் காட்டப்படும் புகார் மனுவில் எந்த தேதியில் புகார் கொடுத்தீர்கள் என்று கையெழுத்துக்கு பக்கத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மருத்துவமனைக்கு ஆட்டோவில் சென்ற விபரத்தை உங்களது புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நாச்சிமுத்து உங்கள் மீது வீசிய கத்தியை போலிசாரிடம் ஒப்படைத்தீர்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்தபோது உங்களை தவிர வேறு யாரும் இல்லை என்றால் சரியல்ல.

அந்த சம்பவத்தில் நீங்களும், உங்கள் சித்தப்பாவும், உங்கள் அம்மாவும், உங்கள் சகோதரியும் சேர்ந்து நாச்சிமுத்துவை அடித்து அவர் அது சம்மந்தமாக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. என்ன விதமான கத்தி என்று புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரியல்ல. உங்களுக்கும், எதிரிக்கும் வீட்டினுடைய சந்து பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். சந்து பிரச்சனையில் எதிரி விட்டுத்தர சொன்னீர்கள் என்றும், அவர் மறுத்ததால் அவர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

நீங்களும், உங்கள் சித்தப்பாவும் எதிரியை அடித்து தள்ளுமுள்ளுவில் ஏற்பட்டபோது கீழே விழுந்து கூர்மையான கல் பட்டதால் அதன் விளைவாக உங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் எதிரியை அடித்து அவருக்கு காயம் ஏற்பட்டதால் அது சம்மந்தமாக சின்னாளபட்டி காவல்நிலையத்தில் எதிரி புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னை யாரும் விசாரிக்கவில்லை. நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor